## வலிகாமம் தெற்கு பிரதேச சபை
-------------------------------------
## யாழ்ப்பாண மாவட்டம்
----------------------------------

### 1. நிதிக் கூற்றுக்கள்
-----------------------------

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்
---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 08 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 30 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்ரெம்பர் 13 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்
--------------------

எனது கணக்காய்வின் மூலம் தென்படுவதும் எனக்கு கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய வலிகாமம் தெற்கு பிரதேச சபையானது 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகள் பேணி வருவருவதுடன் தவிசாளருக்கு என்னால் வழங்கப்பட்ட அறிக்கையில் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படுத்தப்பட்ட தாக்கங்களை தவிர கணக்கீட்டு நியமங்களின்படி வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------

(அ) நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள் பொறுப்புக்கள் மற்றும் வருமானம் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | சொத்துக்கள் | | பொறுப்புகள் | | வருமானங்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | 01 | 2இ972 | - | - | - | - |
| வகைப்படுத்தல் தவறுகள் | 01 | 3இ242இ600 | 02 | 31இ946இ088 | 01 | 2இ477இ000 |
| விடுபாடுகள் | | - | 01 | 3இ943இ714 | | |

(ஆ) சொத்துக்களின் பெறுமதி

-----------------------------------------

(i) சபைக்கு சொந்தமான 8 காணிகள் மற்றும் வாகனங்களின் பெறுமதிகள் இறுதிக் கணக்குகளிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(ii) நன்கொடையாக வழங்கப்பட்ட 07 மோட்டார் வாகனங்களின் பெறுமதிகள் இறுதிக் கணக்குகளிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் கூட்டுத் தொகை ரூபா 1,223,629 ஆக இருந்ததுடன் உப பதிவேடுகளின் பிரகாரம் அத்தகைய கணக்கு மீதியின் கூட்டுத் தொகை ரூபா 1,314,281 ஆக இருந்தது.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கணக்காய்வுக்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 120,195,116 பெறுமதியுடைய 05 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 119,141 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது செலவிலும் கூடிய வருமான மிகை ரூபா 286,391 விளைந்திருந்தது.

2.2 நிதிசார் கட்டுப்பாடு

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 18,788,460 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 9இ944இ955 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

2.3 வருமான நிர்வாகம்

2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பந்துள்ளன.

.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| இறைகளும் வரிகளும் | 1,630 | 1,004 | 5,924 |
| குத்தகை வாடகைகள் | 27,062 | 27,650 | 440 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,780 | 1,817 | - |
| வேறு வருமானங்கள் | 54,022 | 72,811 | 34,594 |

2.3.2 வருமான முகாமைத்துவம்

ஆதனவரி, வியாபார உரிமம் மற்றும் ஏனைய நிலுவைகள் ரூபா 9,012,348 அறவிடுவதற்கு சபையினால் எந்தவிதமான ஆக்க பூர்வமானதும் சட்ட ரீதியானதுமான நடவடிக்கைககள் எவையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.3 வருமான பாதிப்பு

-----------------------------

1999 ம் ஆண்டிலிருந்து மின்சார செயற்பாடுகள் அனைத்தும் இலங்கை மின்சார சபையிடம் கையளிக்கப்பட்ட போதும் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட வீதி மின் விளக்குகள் பொருத்துதல் சம்பந்தமாக இலங்கை மின்சார சபையுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளாமல் சபையின் நிதியில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 677,827 பெறுமதியான செலவினத்திற்கு மீளளிப்பு கிடைக்காமையால் சபைக்கு வருமான பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

2.3.4 நீதிமன்றத் தண்டப்பணம்

------------------------------------

வெவ்வேறு கட்டளைச்சட்டங்களின் கீழ் நீதவான் நீதமன்றங்களிலிருந்து பெறப்பட வேண்டிய 2012 ம் ஆண்டுக்கான நீதிமன்றத் தண்டப்பணப் பணங்கள் பட்டியல் பெறப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

2.3.5 முத்திரைத் தீர்வைக் கட்டணம்

----------------------------------------------

2006, 2007 மற்றும் 2012 ம் ஆண்டுகளுக்கான காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட வேண்டிய முத்திரைத் தீர்வைக் கட்டணம் முறையே ரூபா 2இ340இ163, ரூபா 5,611,669 மற்றும் ரூபா 23இ994இ242 இற்கு சிட்டையிடப்பட்டதேயன்றி அறவிடுவதற்கு எவ்விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.4 சொத்துக்களின் முகாமைத்துவம்

-----------------------------------------------

2.4.1 அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்கள்

-----------------------------------------------

ரூபா 61,236 பெறுமதியான அறவிடப்படாத பதவியினர் கடன் நிலுவைகள் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் பணிக்கொடையில் இருந்து அல்லது பிணையாளிகளிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ந்தும் மீதியாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ளன.

2.4.2 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

------------------------------------------------------------------

கணிப்பீட்டுச் சபை அறிக்கையினால் உறுதிப்படுத்தப்படாத 2012 டிசம்பர் 31 இல் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 125,892,406 ஆகக் காணப்படுகின்றது.

விபரம் வருமாறு :

| விபரம் | தொகை (ரூபா) |
|---|---|
| நிலையான சொத்துக்கள் | 124,668,777 |
| களஞ்சியப் பொருட்கள் | 1,223,629 |
| | 125,892,406 |

2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைக்கான சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| (அ) 1988ம் ஆண்டின் பிரதேசசபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதி | |
| (i) அத்தியாயம் ஐஐஐ பிரிவு 33 | ஓவ்வொரு காலாண்டின் இறுதியிலும் வரி மதிப்பீட்டு எழுதுநரால் வரி இறுக்கத் தவறுவோரின் பட்டியலொன்று தவிசாளருக்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் ஐஐஐ பிரிவு 76 | ரூபா 3,082,264 பெறுமதியான வாடகைகள் மற்றும் குத்தகைகள் கொடுப்பனவு தாமதம் பற்றி அரசிறை எழுதுநரால் தவிசாளருக்கு அல்லது செயலாளருக்குத் தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் ஏ பிரிவு 140 | உரிய திகதியில் ரூபா 268இ567 முற்பணம் செலுத்தத் தவறும் போது செயலாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை ஜனநாயகச் சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதி | |
| (i) நிதி ஒழுங்கு விதி இலக்கம் 396 | 06 மாதங்களுக்கு மேல் மாற்றப்படாமல் உள்ள ரூபா 8,455 பெறுமதியான 04 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ii) நிதி ஒழுங்கு விதி இலக்கம் 571 | இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 570,386 பெறுமதியான நானாவித வைப்புக்களை வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) <u>வடக்கு மாகாண சபை</u>

<u>நிதி ஒழுங்கு விதி</u>

| | |
|---|---|
| நிதி ஒழுங்கு விதி இலக்கம் 101 மற்றும் 102 | உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர்களின் அறிக்கைகள் காலாண்டு அடிப்படையில் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2009 ம் ஆண்டின் 09 ம் இலக்க நாட்டைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டம் | ரூபா 28,115 பெறுமதியான நாட்டைக் கட்டியெழுப்பும் வரி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்தப் பட்டிருக்கவில்லை. |

2.6 ஒப்பந்த நிர்வாகம்

---------------------------

I. செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதில் காலதாமதம்

---------------------------------------------------------------------------------

(அ) வருடாந்த செயற்திட்டம் சரியான முறையில் தயாரிக்கப்பட்டு செயற்திட்டங்களைச் செயற்படுத்தாமையால் நடைமுறையாண்டில் சபைநிதி வேலையின் கீழ் ரூபா 3,010,000 பெறுமதி மதிப்பிடப்பட்ட ஏழாலை இலந்தைக்கட்டி வீதி திருத்த செயற்திட்டத்தைச் செயற்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டதுடன், இவ் வேலையை எதிர்வரும் காலப்பகுதியில் மேற்கொள்ளவென அபிவிருத்தி ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) நடைமுறையாண்டில் செயற்படுத்தவென பாதீடு செய்யப்பட்ட மூலதன வேலைகள் நடைமுறைப்படுத்துவதில் காலதாமதம் காரணமாக 10 மூலதன வேலைகளை எதிர்வரும் காலங்களில் செயற்படுத்தவென ரூபா.18,875,651 சில்லறைக் கடனாளிகள் கணக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(இ) கடந்த காலங்களில் சில்லறைக் கடனாளிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 2,478,366 பெறுமதியான 11 வேலைத்திட்டங்கள் நடைமுறையாண்டு இறுதிவரை நடைமுறைப்படுத்தி கொடுப்பனவு மேற்கொள்ளப்படாது புதிய வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

II. முற்றாகக் கைவிடப்பட்டிருந்த செயற்திட்டங்கள்

---

நடைமுறையாண்டில் நிறைவேற்றவென பாதிடப்பட்ட ரூபா 720,000 பெறுமதியான இணுவில் நியம்பத்தை வீதி திருத்தமும் மீள் தாரிடலும் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.7 செயற்பாட்டு திறமையின்மை

---

அ. சபையின் மூலதன வேலைகளுக்காகவும் ஏனைய சேவைகளுக்காகவும் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு விருத்தி மற்றும் கட்டிட விஸ்தரிப்பு நன்கொடைகள் ரூபா 1,581,486 குறித்த வேலைகள் நடைமுறைப்படுத்தப்படாத நிலையிலும் நிறைவேற்றப்படாத நிலையிலும் நானாவித வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருப்பது சபைப் பரப்பிலுள்ள மக்களுக்கு கிடைக்க வேண்டிய நலன்புரி நன்மைகளைப் பெற முடியாதுள்ளமையைக் காட்டுகின்றது.

ஆ. சபையினால் செலுத்தப்பட வேண்டுமென 2006 இல் சில்லறைக் கடனாளிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 222,405 பெறுமதியான விதவைகள், அநாதைகள் ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை அறிக்கையிடும் திகதி வரை ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

இ. சபையினால் செலுத்தப்பட வேண்டுமென சில்லறைக் கடனாளிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 2,478,366 பெறுமதியான 11 மூலதன வேலைகளுக்கான கொடுப்பனவுகள் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாகச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

ஈ. 2008 – 2011ம் ஆண்டு காலப்பகுதியில் ஒப்பந்தகாரர்களிடமிருந்து அறவீடு செய்யப்பட்டு நானாவித வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 147,080 பெறுமதியான பிடிபணங்கள் அறிக்கையிடும் திகதி வரை குறித்த ஒப்பந்தகாரர்களுக்குச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.

## 2.8 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

## 3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமை கட்டுப்பாட்டு பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

i. வருமான சேகரிப்பு

ii. நிலையான சொத்துக்கள்

iii. கணக்கீடு

iv. மனிதவள முகாமைத்துவம்

v. நன்கொடை

vi. நானாவித வைப்புக்கள்